கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - அக்டோபர் 10, 2026

Fortnightly E-paper ● October 10, 2026



வெற்றியும் தோல்வியும்!

சுப.வீரபாண்டியன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை • திருவள்ளுவர் ஆண்டு 2057, - அக்டோபர் 10, 2026

Fortnightly E-paper • October 10, 2026

வெற்றியும் தோல்வியும்!

சுப.வீரபாண்டியன்

எதிர்பார்த்த இடைத்தேர்தல்களின் முடிவுகள் எதிர்பாராத விதமாக அமைந்துவிட்டன!

கழுத்தில் அணிவித்த வெற்றி மாலையைத் தூக்கி எறிந்து விட்டு, மறுபடியும் கழுத்தை நீட்டிய வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று நம்பினோம். அந்த நம்பிக்கை பொய்த்திருக்கிறது!

இருப்பினும், இத்தேர்தல் முடிவுகள் தொடர்பாக, இரண்டு மூன்று செய்திகளில் நாம் கவனம் செலுத்த வேண்டி இருக்கிறது!


சென்ற பொதுத் தேர்தலில், ஒரு தொகுதியில் இரண்டாம் இடத்திலும், இன்னொரு தொகுதியில் மூன்றாம் இடத்திலும் இருந்த த.வெ.க. இப்போது இரண்டு தொகுதிகளிலும் முதல் இடத்திற்கு வந்திருக்கிறது! சென்ற பொதுத் தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும் முதல் இடத்தில் இருந்த அதிமுக, இப்போது இரண்டிலுமே மூன்றாவது இடத்திற்குப் போய் இருக்கிறது!

திமுகவைப் பொறுத்தவரையில், ஒரு தொகுதியில் இரண்டாம் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது! இன்னொரு தொகுதியில், மூன்றாம் இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறது!

பொதுத் தேர்தலை விட இப்போது பதிவான வாக்குகளின் எண்ணிக்கை சற்றுக் குறைந்திருக்கிற நிலையில், த.வெ.க. கொஞ்சம் கூடுதல் வாக்குகளைப் பெற்றிருக்கிறது! அதிமுகவோ பெரும் இழப்பைச் சந்தித்து இருக்கிறது!

பதிவான வாக்குகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதை வைத்துக் கணக்கிட்டால், திமுக அதே பழைய வாக்குகளை மீண்டும் பெற்று இருக்கிறது! திமுகவின் வாக்காளர்கள் மாறவே இல்லை என்பதற்கு இது சான்றாக இருக்கிறது!

இந்த இடத்தில் நாம் இன்னொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுத் தேர்தலின் போது, திமுகவுடன் இருந்த காங்கிரஸ், மதிமுக, விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், இரண்டு பொதுவுடைமைக் கட்சிகள் அனைத்தும் இப்போது திமுகவை விட்டு விலகி



விட்டன! பொதுவுடமைக் கட்சிகளைத் தவிர மற்றவை அனைத்தும் தவெக விற்கு ஆதரவாக நின்றன!

இந்த நிலையிலும் திமுகவின் வாக்குகள் குறையவில்லை என்பது, திமுகழகத் தலைவர் சொல்லி இருப்பது போல், தோல்வியில் வெற்றி என்றே கருதப்பட வேண்டும்!

எனவே பல புதிய கட்சிகள் கூட்டணியில் இணைந்ததால், சிறிய அளவில் தவெகவிற்கு வாக்குகள் கூடியிருக்கின்றன!

இன்னொரு செய்தியும் இன்று ஊடகங்களில் பேசப்படுகிறது. வெளியில் அறிவிக்காமல், பாமக, ஆளுங்கட்சிக்கு ஆதரவு அளித்துள்ளது என்பதே அந்தச் செய்தி! அதன் விளைவாகவே, குறிப்பாக, மதுராந்தகம் தொகுதியில் கூடுதல் வாக்குகள் விஜய்க்கு கிடைத்திருக்கிறது!

இவை அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது, இடைத்தேர்தலில் ஆளுங்கட்சி பெற்றிருப்பது வெற்றியில் தோல்வி என்றே கூற வேண்டும்!

திராவிட மாணவர் பேரவை சென்னையில் பயிற்சிப் பட்டறை













திராவிட மாணவர் பேரவையின் மாநில, மாவட்ட மற்றும் கல்லூரி நிர்வாகிகளுக்கு அரசியல் மற்றும் நிர்வாகப் பயிற்சிப் பட்டறை 20-09-2026 அன்று Olive And Orchid Banquet Hall-சென்னை-கோடம்பாக்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திராவிட மாணவர் பேரவையின் நிறுவனர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் பங்கேற்று "வரலாறு படிப்போம், வரலாறு படைப்போம்" எனும் தலைப்பில் கருத்துரையாற்றினார்,

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சிற்பி செல்வராசு அவர்கள் "What A Nation...?" எனும் தலைப்பில் கருத்துரையாற்றினார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொருளாளர் தோழர் செல்வின் சௌந்தர்ராஜன் அவர்களும் திராவிட நட்புக் கழகத் தலைவர் தோழர் ஆ.சிங்கராயர் அவர்களும் நிர்வாகிகளுக்கு நிர்வாக பயிற்சி வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், திராவிட மாணவர் பேரவையின் மாநில நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டத்தைச் சார்ந்த மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சட்டக் கல்லூரி ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்று பயிற்சி பெற்றனர்

திராவிட மாணவர் பேரவையின் நிறுவனர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்களும், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சிற்பி செல்வராசு அவர்களும், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொருளாளர் தோழர் செல்வின் சௌந்தர்ராஜன் அவர்களும் திராவிட நட்புக் கழகத் தலைவர் தோழர் ஆ.சிங்கராயர் அவர்களும் திராவிட மாணவர் பேரவையின் Clubs-களை துவக்கிவைத்தார்கள்.

மதுராந்தகம் இடைத்தேர்தல் வாக்குசேகரித்த மாணவர் பேரவை







நடந்து முடிந்த மதுராந்தகம் இடைத்தேர்தலையொட்டித் திராவிட மாணவர் பேரவைத் தோழர்கள் 29-09-2026, 30-09-2026, 01-10-2026 ஆகிய மூன்று நாள்கள் காலை முதல் இரவுவரை வாக்குசேகரித்தார்கள். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் தோழர் இ.பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வேடவாக்கம், அண்டவாக்கம் மற்றும் புதுப்பட்டு உள்ளிட்ட கிராமங்களில் திராவிட மாணவர் பேரவைத் தோழர்கள் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்கள். களத்தில் திராவிட மாணவர் பேரவையின் மாநிலச் செயலாளர் தோழர் இரா.அருள் ஜோதி பாபா தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர்கள் தோழர் ப்ரீனிவாஸ், தோழர் ரேவதி, மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர்கள் தோழர் தமிழினி, தோழர் முத்துக்குமார், தோழர் அருணோதயன் மாவட்ட அமைப்பாளர்கள் தோழர் ஸ்டீவன் பென்னட், தோழர் அகில் சுந்தர், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் தோழர் பாலாஜி, தோழர் மணிமொழி,தோழர் புஷ்பராஜ், தோழர் ரசிகபிரியா உள்ளிட்ட மாணவர் பேரவையின் பொறுப்பாளர்கள் பரவலாக வாக்குசேகரித்தார்கள்.

ஒசூரில் தலைவருடன் சந்திப்பு



பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களை, கிருஷ்ணகிரி மாவட்டத் தோழர்கள் ஒசூரில் 26-09-2026 அன்று சந்தித்து உரையாடினர்.

பெரியார் பிறந்தநாள் விழா





18-09-2026 அன்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாள் விழா, திராவிட மாணவர் பேரவை சார்பாக "தாய்க் கிழவனை கொண்டாடுவோம்" நிகழ்ச்சி மாநிலச் செயலாளர் தோழர் இரா.அருள் ஜோதி பாபா அவர்கள் தலைமையில் படைப்பு அரங்கம் கோடம்பாக்கத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில், தோழர் தமிழன் பிரசன்னா அவர்கள் "திராவிடத்தால் எழுந்தோம்" எனும் தலைப்பில் கருத்துரையாற்றினார். தோழர் இரா.ரேவதி அவர்கள் "பெரியார் - காலத்தை கடந்த கலகம்" எனும் தலைப்பிலும் தோழர் ம.கா. தமிழினி "பெரியார் - அதிகாரத்திற்கு எதிரான அறிவு" எனும் தலைப்பிலும் தோழர் மோ. ரூபஸ் அவர்கள் "பெரியார் - யாருக்கெல்லாம் எதிரி" எனும் தலைப்பிலும் கருத்துரையாற்றினார்கள். மேலும் தோழர் க.ஸ்ரீநிவாஸ் தொடக்க உரையாற்றினார், தோழர் ஸ்டீவன் பென்னட் நன்றியுரையாற்றினார். நிகழ்வில், மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெரியார் திடலில் பெரியாருக்கு

17-09-2026 அன்று திராவிட மாணவர் பேரவை சார்பாக மாநிலச் செயலாளர் தோழர் இரா.அருள் ஜோதி பாபா தலைமையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களுக்கு, சென்னை பெரியார் திடலில் புகழஞ்சலி செலுத்தப்பட்டது....! இந்நிகழ்வில் மாணவர் பேரவையின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்...!

